**<u>25.09.2025</u>   <u>அசல் வழக்கு எண். 264/2008</u>  Starting Time : 01.11  p.m.**

**<u>வா.சா.1</u>  திரு.பழனிவேல் என்கிற வீராசாமி த/பெ.நடேசன்.**

**<u>சாட்சியை சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**1**. தாவாவில் குறிப்பிட்டுள்ள 3வது அயிட்ட சொத்தினை 2ஆம் பிரதிவாதி இராமகிருஷ்ணன், சிவராஜ் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர்கள் கிரயம் பெற்றார்கள் என்று கூறியுள்ள பட்சத்தில், மேற்படி இராமகிருஷ்ணன், சிவராஜ் மற்றும் சுப்பிரமணியன் கிரயம் கொடுத்த சொத்துக்களை எவ்வளவு ஆண்டுகளாக அனுபவித்து வந்தார்கள் என்றால் பல வருடங்களாக அனுபவித்து வந்தார்கள். தாவா 1 மற்றும் 4 அயிட்ட சொத்துக்களை பிரதிவாதிகள் எத்தனை வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்தபோதிலிருந்து அனுபவித்து வருகிறார்கள்.

**2**. பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்துக்களை பொறுத்து பட்டா ஏற்பட்டதற்கு பட்டா மாற்றம் செய்ய உத்தரவிடக்கோரி வட்டாட்சியரிடம் மனு ஏதும் விண்ணப்பத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். நான் அளித்த மனுவிற்கு என்ன பதில் வந்தது என்றால் பதில் ஏதும் வரவில்லை. மனு கொடுத்ததற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒப்புகை சீட்டினை தாக்கல் செய்துள்ளேன்.

**3**. என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.7** ஆவணம் தான் மேற்படி ஒப்புகை சீட்டா என்றால் சரிதான். அதில் தாவா சொத்து விவரங்கள் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி நான் தாக்கல் செய்துள்ள **வா.த.சா.ஆ.7**ஆவணம் வழக்கு சொத்துக்களுக்காக கொடுக்கப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ள விவரம் 2007-ல் தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். 2007-க்கு முன் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது தகப்பனார் பெயரில் இருந்தது. அதற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரி

ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

**4**. தாவா சொத்துக்களை தவிர எனக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள **வா.த.சா.ஆ.8 மற்றும் 9** ஆவணங்கள் இந்த தாவா சொத்துக்களுக்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள **வா.த.சா.ஆ.1** ஆவணமான உயில் ஆவணம் பெயரளவில் மட்டும் தான் உள்ளது என்றும், அதை நான் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்றும், பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதில் எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

**5**. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தில் 3ல் ஒரு பங்கு என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் எந்த பகுதி என்று தெளிவாக குறிப்பிடப்படாததால் நான் தாவா சொத்துக்களில் உயில் ஆவணத்தின்படி உரிமை கொண்டாட முடியாது என்றும், வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த போது தான் எனக்கு உயில் ஆவணம் பற்றிய விவரம் தெரிய வந்தது என்றும், அதனால் நான் தாக்கல் செய்த வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்களில் எனக்கு உரிமையில்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 01.29 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வந்தவாசி.